செ.வெ.எண் : 29/ மே                                                                                          நாள் : 27.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## விவசாயிகள் தங்களது விளைபொருட்களை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள உதவி எண்

### மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி , பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 24.05.2021 முதல் 31.05.2021 வரையில் தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

இக்காலகட்டத்தில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் மற்றும் விளைபொருட்களை விற்பனை செய்வதில் ஏற்படும் சிரமங்களைக் களைந்திட ஏதுவாக மாவட்ட அளவில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை, வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களை உள்ளடக்கிய உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உதவி மையத்தை 9342382356 என்ற எண்ணில் காலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**